# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதிய***
***பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2023.07.17 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்)*

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**ஜனரஜ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹர்ஷண ராஜகருணா அவர்களால்*
*பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஜனரஜ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

**முன்னுரை**

"ஜனரஜ மன்றம்" என அழைக்கப்படு வதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றும் மற்றும் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதா தலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாததாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்**

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் சமூக நலன்புரி நோக்கத்துக்காக தாபிக்கப்பட்டுள்ள இவ்வரச சார்பற்ற ஒழுங்கமைப்பு ஜனரஜ மன்றம் என அழைக்கப் படுகின்றது.

**ஜனரஜ மன்றத்தைக் கூட்டிணைத்தல்**

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஜனரஜ மன்றத்தின் தற்போதைய உறுப்பனர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைக்கப்படும் மன்றத்தின் உறுப்பினர் களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களான அத்தகை யோரான அத்தகைய ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஜனரஜ மன்றம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமையுடன் கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அது

அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

மன்றத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** மன்றம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இனம், மதம், சாதி, முதலிய ஏதேனும் வேறுபாடு இன்றி மனித நல்வாழ்வை எய்துதல்;

(ஆ) வறுமையை ஒழித்தல், சமூக இருப்புக்கான தடங்கல்களை அடையாளம் காணல் மற்றும் மனித அபிவிருத்திக்கு முன்னோடியாவிருத்தல்;

(இ) பரஸ்பர புரிந்துணர்வுடனும் ஏதேனும் தனிப்படுத்துகையின்றியும் சமாதானமானதும் நட்புரீதியானதுமான இலங்கைச் சமுதாயமொன்றை உருவாக்குவதற்காக அர்ப்பணித்தல்;

(ஈ) மனிதர்களை நற்குணமிக்கவர்களாவாக்குகின்ற பல்வேறு சமய விழுமியங்களை பரஸ்பரமான முறையில் புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்குவதற்கு இணைவதன் மூலம் நல்லொழுக்கமுள்ள பிரசைகளை முழுமையாகக் கொண்ட நாடொன்றை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்தல்;

(உ) இனம், மதம், சாதி வேறு ஏதேனும் இனத்துவம் பற்றிய எண்ணக்கருக்களினால் அல்லாமல் இலங்கைப் பிரசையொருவராகவிருத்தல் என்னும் எண்ணக்கருவினால் மட்டுமே நாட்டுப்பற்று தோற்றுவிக்கப்படமுடியும் என நம்புகின்ற பிரசையை உருவாக்குவதற்கு பங்குபற்றுதல்;

(ஊ) எல்லா சமய அறிஞர்களினதும் நோக்கு மனித இணக்கப் பாடு மற்றும் சமூகநலனைத் தவிர வேறொன்றுமில்லை என்ற கருத்தை ஏற்கச் செய்வதன் மூலம் உறுதி செய்யப் பட்ட மனித சமுதாயமொன்றை உருவாக்குவதற்கு எத்தனித்தல்;

(எ) கல்வியானது மதம், பொருளாதாரம், வயது, பால், சூழல் மற்றும் வேறு ஏதேனும் காரணத்தினால் தலையிடப் படுதலாகாது என்ற கருத்தை சமூகமயப்படுத்தல் மற்றும் அதன் தடங்கல்களுக்கெதிராக செயலாற்றுதல்;

(ஏ) கலாசார விழுமியங்களைப் பாதுகாத்தல், பேணிக்காத் தல், பரப்புதல், மதிப்பிடுதல், பரஸ்பரமான முறையில் புரிந்துகொள்ளல் அத்துடன் ஏதேனும் சமய தனிப் படுத்துகையின்றி அவற்றை அழிப்பதற்கு காணப்படும் தடைகளை ஒதுக்கித் தள்ளுவதற்காக நடவடிக்கை எடுத்தல்;

(ஐ) எல்லா வயினதுமான கலைகள் மற்றும் கைவினைப் பொருட்கள், அழகியல், அவற்றின் நயம் பற்றிய மனித சிந்தனைகள் மற்றும் உணர்வுகளுக்கு முன்னோடியாக விருத்தல் மற்றும் அவற்றை மதிப்பிடுதல் அத்துடன் அவற்றைப் பரப்புவதற்கு எதிராகக் காணப்படும் தடங் கல்களைப் புரிந்து கொள்ளல், அடையாளங் காணல் மற்றும் கையாண்டு தீர்த்தல்;

(ஒ) சமகால இலக்கியத்தைப் போற்றிக்காத்தல் மற்றும் புராதன இலக்கிய புத்தகங்களை மதிப்பிடுவதற்கு நாளது வரையாக்கிச் செயலாற்றுதல் அத்துடன் மாணவர்களுக்கு அறிவையும் அவற்றின் கிரகித்தலையும் வழங்குதல்;

(ஓ) மேலே குறித்துரைக்கப்படாத, இடைநேர்விளைவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகளிலும் தாமதமின்றி விளங்கிக்கொள்ளப்பட்ட வேறு எவையேனும் கருமங் களிலும் ஈடுபடுதல்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, மன்றமானது பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:- *மன்றத்தின் தத்துவங்கள்*

(அ) மன்றத்தின் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான உதவுதொகைகள், மானியக்கொடைகள், நன்கொடைகள் மற்றும் எல்லா வகையினவான கொடைகளைக் கோருதல் மற்றும் பெறுதல்;

(ஆ) மன்றத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், வாடகைக்கு எடுத்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது வேறுவகையாகப் பெறுதல்;

(இ) மன்றத்தின் நோக்கத்திற்காக வட்டியுடன் அல்லது வட்டியின்றி நிதிகளைக் கடனாகப் பெறல் அல்லது அவற்றைத் திரட்டுதல்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்தல், பேணுதல் மற்றும் மூடிவிடுதல்;

(உ) மன்றத்தின் நோக்கத்திற்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை நிறைவேற்றுப்பேரவை அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல்;

(ஊ) மன்றத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் எவரேனும் ஆளுடன் அல்லது ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களை செய்துகொள்ளல்;

(எ) ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தைப் பாதிக்கக் கூடிய ஏதேனும் நிலைமையை பொறுப்பேற்றல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றல், புரிதல் மற்றும் நிருவகித்தல்;

(ஏ) மன்றத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், பதவிநீக்குதல் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தல் அத்துடன் மன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக் கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதல்; அத்துடன்

(ஐ) மன்றத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லாக் காரியங்களையும் செய்தல்;

(ஒ) மன்றத்தின் ஏற்றங்கீகரிக்கப்பட்ட விதிகளைக் கடைப் பிடிப்பது ஒவ்வொரு உறுப்பினரினதும் கடமையாதல் வேண்டும்.

மன்றத்தின் கட்டமைப்பு

**5.** (1) மன்றத்தின் அலுவல்களானது அப்போதைக்குப் பயனுள்ளதாகவுள்ள மன்றத்தின் விதிகளுக்கிணங்க தீர்மான மொன்றினால் நியமிக்கப்பட்ட முகாமைச் சபையொன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் நடை முறைக்கு வரும் தேதிக்கு முன்னர் பதவி வகித்த உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) முகாமைச் சபையானது பின்வரும் அதிகாரப்படிநிலை ஒழுங்கு வரிசையில் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண் டும்:-

(i) தவிசாளர்;

(ii) மூன்று உதவிப் பதிவாளர் பதவிகள் (பல்வேறு விடயங் களின் கீழ் நியமிக்கப்பட்டவை);

(iii) பதிவாளர்;

(iv) மூன்று உதவிப் பதிவாளர் பதவிகள் (பல்வேறு விடயங் களின் கீழ் நியமிக்கப்பட்டவை)

(v) ஒழுங்கமைப்புசார் செயலாளர்

(vi) நிதி நிறைவேற்று அலுவலர்;

(vii) உதவி நிதி நிறைவேற்று அலுவலர்;

(viii) நிறைவேற்றுப் பேரவை (எட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுப் பேரவையொன்றை நியமிப்பது அவசியமாகும்).

(4) முகாமைச் சபையின் பொதுவான பொறுப்புகள்:-

(i) தவிசாளர்-

அவர் அவரது தலைமைத்துவத்துடனான எல்லா அலுவல்களுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

அவர் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும்.

அவர் முகாமைச் சபையின் நன்மதிப்பையும் ஒருங்கிணைப்பையும் கட்டியெழுப்புதல் வேண்டும்.

அவர் எல்லா அவசியமானவைகளையும் மீள் கட்டமைத்தல் வேண்டும்.

அவர் மன்றத்தின் நோக்கங்களுக்கு அவசியமான உதவுதொகைகள், மானியக்கொடைகள், நன் கொடைகள் மற்றும் எல்லா வகையினவான கொடை களைக் கோருவதற்கும் சேகரிப்பதற்கும் அவசிய மான திட்டங்களை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(ii) துணைத் தவிசாளர்கள்–

தவிசாளர் வருகைதராதபோது, தவிசாளரின் கட்டளைக்கிணங்க அவரின் கடமைகளை அவர்கள் புரிதல் வேண்டும்.

அவர்கள், அவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்டனவும் அளிக்கப்பட்டனவுமான கருத்திட்டங்களை ஒழுங்கமைத்தலும் பேணுதலும் வேண்டும்.

(iii) பதிவாளர்–

அவர் எல்லாப் பதிவேடுகளையும் கவனத்திற் கெடுத்தல் வேண்டும்.

அவர் கூட்டங்களை ஒழுங்குபடுத்தலும் பதிதலும் வேண்டும்.

அவர் முகாமைச் சபைக்கு மத்தியில் முறையான ஒருங்கிணைப்பொன்றை பேணுதல் வேண்டும்.

அவர் புதிய முன்மொழிகள் மற்றும் கருத்திட்டங்கள் பற்றிய ஆவணங்களைப் பதிதல் வேண்டும் என்பதுடன் அவற்றை நிறைவேற்றுவதற்கு அவசியமான வழிகாட்டுநெறிகளை வழங்குதலும் வேண்டும்.

(iv) உதவிப் பதிவாளர்கள் (03 பதவிகள்)–

அவர்கள், பதிவாளரினால் குறித்தளிக்கப்பட்ட கடமைகளைப் புரிதல் வேண்டும்.

அவர்கள், பதிவாளரின் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் முனைப்பாக உதவுதல் வேண்டும்.

(v) ஒழுங்கமைப்புசார் செயலாளர்-

அவர் ஒழுங்கமைப்பினால் நிறைவேற்றப்படும் எல்லா விசேட கருத்திட்டங்களையும் துல்லியமாகவும் வினைத்திறனாகவும் ஒழுங்கமைப்பதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(vi) நிதி நிறைவேற்று அலுவலர்-

அவர் எல்லா நிதியையும் நிர்வகித்தல் வேண்டும்.

அவர் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் முறைப்படியாகவும் சிக்கனமான முறையிலும், வினைத்திறனாகவும், துல்லியமாகவும் மற்றும் வெளிப்படையாகவும் பேணுதல் வேண்டும்.

அவர், அதன் பதிவேடுகளைப் பேணுவதற்கும் நாளதுவரையாக்குவதற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

அவர் நிதி முகாமை பற்றிய செம்மையான தரவை சேகரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிக்கைகள் பற்றி முகமைச் சபைக்குத் தெரியப்படுத்துதலும் வேண்டும்.

(vii) உதவி நிதி நிறைவேற்று அலுவலர்-

அவர், நிதி நிறைவேற்று அலுவலரின் அலுவல்களுக்கு முழுமையாக உதவுதல் வேண்டும்.

அவர், நிதி நிறைவேற்று அலுவலர் வருகைதராத போது அவர் சார்பாக செயலாற்றுதல் வேண்டும்.

(viii) நிறைவேற்றுப் பேரவை (எட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுப் பேரவையொன்றை நியமிப்பது அவசியமாகும்)–

நிறைவேற்றுப் பேரவையின் கூட்டுப்பொறுப்பு தவிர்ந்த பின்வரும் உப தலைப்புக்களைக் கொண்ட பொறுப்புக்கள் ஒவ்வொரு நிறைவேற்று உதவி யாளருக்கும் குறித்தளிக்கப்படுதலும் அளிக்கப் படுதலும் வேண்டும்–

(அ) பொருளாதார மற்றும் சமுதாய சேவைகள்;

(ஆ) நுண் கலைகள், கலைகள், ஆழகியல் மற்றும் இலக்கியம்;

(இ) விளையர்டுக்கள் மற்றும் பாரம்பரிய ஆட்டங்கள், விளையாட்டு விழாக்கள் மற்றும் போட்டிகள்;

(ஈ) சமய மற்றும் கலாசார அலுவல்கள்;

(உ) கமத்தொழில், பாரம்பரிய மற்றும் சுதேச தன்மையின் மதிப்பீட்டுச் செயன்முறை;

(ஊ) சூழல் மற்றும் வனசீவராசிகள் செயற்பாடுகள்;

(எ) கல்வி நுட்பங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பம்;

(ஏ) கணக்குளை சோதனையிடுதல்.

(உ) முகாமைச் சபையின் கூட்டங்கள்:-

(i) முகாமைச் சபையின் நியமனங்கள் மூன்றாண்டு காலப்பகுதிக்குயொன்றிற்கு வலுவிலிருத்தல் வேண்டும்;

(ii) நாட்டில் அவசரகால நிலைமையெதுவும் நிகழா திருப்பின் விதித்துரைக்கப்பட்ட நேர காலப்பகுதி நிறைவுபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் புதிய முகாமைச் சபையொன்றை நியமிப்பது அவசியமாதல் வேண்டும்.

(iii) அத்தகைய புதிய சபையொன்றை நியமிப்பதற்கு தாமதமானால், எவையேனும் கருத்திட்டங்களை நிறைவேற்றாமல் இருப்பது அல்லது வேறு எவை யேனும் செயற்பாடுகளைப் புரியாமல் அல்லது நிறைவேற்றாமல் இருப்பது நிர்ணயிக்கப்பட்ட விதி யொன்றாக விருத்தல் வேண்டும்.

(iv) ஆகக் குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதங்களுக் கும் ஒருமுறை பொதுக்கூட்டமொன்றை நடாத்து வது அவசியமாதல் வேண்டும் என்பதுடன் பொதுக்கூட்டத்துக்கு சமூகமளிக்காதவர்கள் உட்பட மூன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட பெரும்பான்மைப் பலமொன்று இருந்தாலொழிய தீர்மானம் மற்றும் முடிபு எதுவும் செய்யப்படுதலாகாது.

(v) பதிவாளர் உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பகுதி யினரால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கை யொன்றுக்கு பதிலளிக்கும் முகமாக பொதுக் கூட்ட மொன்றைக் கூட்டுவதற்கு தவறுதலாகாது.

(vi) ஒவ்வொரு முகாமைச் சபையும் அவர்களின் புதிய நியமனத்தின் மேல் ஒரு மாத காலப்பகுதியினுள் அடுத்துப் பின்னரான இரண்டு ஆண்டு காலப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டமொன்றை சமர்ப் பித்தல் வேண்டும்.

ஒழுங்கமைப்பு சார் நிதியம்

**6.** (1) மன்றமானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் செயற்பாடுகளுக்கும் உத்தேசிக்கப் பட்ட கருத்திட்டங்களின் ஏற்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்துக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதி விருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகிரங்க வங்கிகளில் மன்றத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) ஆதனத்தின் மறுசீரமைப்பு, அபிவிருத்தி மற்றும் சீராக்கம் என்பவற்றிற்காக பெறுமானத் தேய்வு நிதியமொன்றும் கடனாழ் நிதியமொன்றும் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் மன்றத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

மன்றத்தின் கணக்குகளும் அவற்றைக் கணக்காய்வு செய்தலும்

**7.** (1) மன்றமானது அதன் வருமானமும் செலவினமும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்;

(2) கணக்கு அல்லது கணக்குகள் மன்றத்தின் கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மன்றத்தின் நிதியாண்டு, ஒவ்வொர ஆண்டும் சனவரி முதலாவது (1ஆவது) நாளிலிருந்து திசெம்பர் முப்பத்தோராம் (31 ஆவது) நாள் வரை கருதப்படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படற் பாலனவையும் மன்றத்துக்கு செலுத்தப்படற் பாலனவையு மான பணங்கள்

**8.** எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அதே நாளன்று கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**9.** (1) மன்றம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் ஏதேனும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் மன்றத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது.

(2) அத்தகைய ஆதனங்களும் பொறுப்புக்களும் மன்றத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், ஏதேனும் வருமானம் அல்லது ஆதனத்தை அதன் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளித்தல் தொடர்பாக விதிகள் எவையும் ஆக்கப்படாததும் அதன் விதிகளின் படி அதன் உறப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்துக்கு திருப்பிக்கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அது, மன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணுதல்

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அல்லது ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது இச்சட்டத்தின் ஆட்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் அல்லது அவர்களின் உரிமைக்கோரிக்கையாளர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளின் உரிமைகளைப் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*